**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.**

**அசல் வழக்கு எண். 59/2024**

2026ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26 ஆம் நாள் வியாழக்கிழமை சாட்சியாகிய கிரிதரன் **PW2.** இன் வாக்குமூலம், 2023ஆம் ஆண்டு பாரதிய சாக்ஷிய அதிநியம் சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி **திருமதி. P.கனிமொழி, L.L.M.,** மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

தேதி : 26.02.2026

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | **கிரிதரன்** | | |
| Father /Husband Name | : | **மதிவாணன்** | Court | : |
| Village | : | **கிராம நிர்வாக அலுவலர், பெரம்பூர்** | Taluk | : |
| Calling | : | | | |
| Age | : | 24/2026 | | |

**சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.**

**முதல் விசாரணை:**

நான் தற்போது பெரம்பூர் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். பெரம்பூர் கிராம புல எண்கள். 59/4C , 59/4D ஆகியவை நத்தம் அடங்கல் பதிவேட்டின்படி வாதி பாலமுருகன் பெயரில் உள்ளது. அதில் அவர் வீடு கட்டி வசித்து வருகிறார். கிராம புல வரைபடத்திலும் வாதியின் வீடு புல எண்கள். 59/4C , 59/4D ல் உள்ளது. புல எண்கள். 59/4C , 59/4D க்கான அடங்கல் பதிவேட்டின் உண்மை நகல் **சாசாஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. புல எண் 59க்கான புல வரைபடத்தின் உண்மை நகல் **சாசாஆ 2** ஆகவும், புல எண்கள். 59/4C , 59/4D க்கான அ பதிவேட்டின் உண்மை நகல் **சாசாஆ 3** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. வாதி குடியிருக்கும் மேற்படி புல எண்களுக்கான நான்கெல்லை, கிழக்கில் மெயின்ரோடும், மேற்கில் சுப்ரமணியசாமி புஞ்சை, வடக்கில் பண்டரிநாதன் வீடு, தெற்கில் ராஜாராமன் மனை யும் உள்ளது. வாதி கிரயம் பெற்றுள்ள கிரய

ஆவணத்தில் உள்ள நான்கெல்லையும், புல எண்கள் 59/4C , 59/4D க்கான நான்கெல்லை ஒன்றாகவே உள்ளது.

**<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

தாவா சொத்தில் உள்ள இரண்டு புல எண்களும் ஒரே நான்கெல்லையில் உள்ளது என்றால் சரிதான். இரண்டு புல எண்களின் மொத்த விஸ்தீரணம் 250 சதுர மீட்டர் ஆகும். அதில் புல எண். 59/4C ல் 100 சதுர மீட்டர் உள்ளது. புல எண்.59/4D ல் 150 சதுர மீட்டர் உள்ளது. நான் தாவா இடத்தை தள ஆய்வு செய்தேனா என்றால் செய்தேன். முதல் விசாரணையில் சொல்லியுள்ளபடி நான்கெல்லை மற்றும் அளவு ஒன்றாகவே உள்ளது.